
# அடுத்த காலடி - 1

அரசியல், தத்துவார்த்த காலாண்டிதழ்.



www.tamilarangam.net
640

www.tamilarangam.net

# அடுத்த காலடி - 1

அரசியல், தத்துவார்த்த காலாண்டிதழ்.

*ஏப்பிரல் 1991*

*தொடர்புகளுக்கு:*
**S.Nagalingam**
**27, Orpheus Tower,**
**Desmond Street,**
**London SE14 6HY**
**U.K.**

***ஆதரவாளர் நிதி £ 1.00***

*அட்டை ஓவியம்: கே.கே.ராஜா*

*எழுத்துப்பதிவு: இ.குருநாதன்*

## ஒரு அறிமுகம்

வெளிநாடுகளில் அகதிகளாக வாழ்ந்துவரும் நாங்கள், எமது தாயகத்தில் வாழ்ந்துவரும் மக்களின் துயரங்களுக்கு முடிவுகாண அவாக்கொண்டவர்கள். மாக்சிச–லெனினிச கொள்கைகளில் உறுதிப் பிடிப்புக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியொன்றை உருவாக்குவதே தமிழீழத்தினதும், இலங்கையினதும் முழுமையான விடுதலைக்கும் சுபீட்சத்துக்குமான ஒரே வழி என்று நம்புபவர்கள் நாங்கள். அவ்வாறான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குபவர்கள்.

இங்கு நாம் அநுபவித்துவரும் 'ஜனநாயகத்தை' சரிவரப் பயன்படுத்தி, எமது மக்களின் விடுதலைக்கு உதவ வேண்டியது தேசப்பற்றுள்ள ஒவ்வொருவரின் கடமையுமாகும். வெளிநாடுகளில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகளில் இலங்கையின் விடுதலைக்கான அரசியற்பாதை பற்றிய விவாதம் அண்மைக் காலமாக உருவாகி வளர்ந்து வருகின்றது. நிகழ்ந்து வரும் அரசியல் விவாதங்களை ஒழுங்கமைக்கவும், நெறிப்படுத்தி வளர்த்தெடுக்கவும், அதன் மூலம் தலைமறைவாக, சொல்லொணாத் துயரங்களுக்கும், அழித்தொழிப்புகளுக்கும் மத்தியில் ஈழத்தின் விடுதலைக்கான சரியான அரசியற் பாதைக்காக, மிகவும் சிறுபான்மையாகவேனும் நம்பிக்கையோடு உழைத்துவரும் தோழர்களுக்கு உதவுவதே எமது நோக்கம்.

இவ்வடிப்படையிலேயே எமது முதற்காலடி இது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா/லெ மக்கள் யுத்தம்) தமிழ்நாடு மாநிலக் கமிட்டியால் 1990 ஓகஸ்ற்றில் வெளியிடப்பட்ட, *"பிரேமதாசா அரசு தொடுத்துள்ள தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்த ஈழத் தமிழினத்தின் விடுதலை யுத்தத்தை ஆதரிப்போம்!"*, என்ற கட்டுரையை இங்கு மறுபிரசுரம் செய்கின்றோம்.

இன்று நடைபெற்றுவரும் போரில் தமிழீழப் பாட்டாளி வர்க்கத்தின் கடமையை வரைந்துள்ள அறிக்கை இதுவாகும். இதுபற்றிய கருத்துக்களை வரவேற்கின்றோம்.

இந்த இதழை மிகவும் குறுகிய காலத்தில் தயாரிக்க நேர்ந்ததால், வேறு சில ஆக்கங்களைச் சேர்க்க முடியவில்லை. அடுத்த "காலடி" அதிக பக்கங்களுடனும் புதிய ஆக்கங்களுடனும் வெளிவரும்.

மீண்டும் சந்திப்போம்!

வெளியீட்டுக் குழு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பிரேமதாசா அரசு தொடுத்துள்ள தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்த ஈழத் தமிழினத்தின் விடுதலை யுத்தத்தை ஆதரிப்போம்!

## இந்திய அரசே! ஈழத்தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!

இலங்கையின் வடக்கு கிழக்கு மாநிலத்தில் ஜூன் 11-ம் தேதியிலிருந்து இலங்கை இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் போர் நடைபெறுகிறது. இப்போருக்கு காரணம் யாது? தூண்டுதல் என்ன? யார் பொறுப்பு? இந்திய இராணுவத்தை இலங்கையை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையின் மீது விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டிருந்தது. அப்போது நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது இலங்கை அரசு பின்வரும் கோரிக்கைகளை நடைமுறைப் படுத்துவதாக ஒப்புக்கொண்டது.

அவை: வடகிழக்கு மாகாண கவுன்சிலை கலைப்பது, அதற்குத் தேர்தல் நடத்துவது, பிரிந்து செல்லும் உரிமை கோருவதை தேசவிரோதம் எனும் அரசியல் சட்ட 6-வது திருத்தத்தை ரத்துச் செய்வது, வடகிழக்கு மாநிலத்தில் சிங்களவர்களைக் குடியேற்றுவதைக் கைவிடுவது. இக் கோரிக்கைகளை இலங்கை அரசு நடைமுறைப் படுத்தவில்லை. அளித்த வாக்குறுதிகளுக்கு மாறாக, மாநில கவுன்சிலை நிலைநிறுத்தும் பொருட்டு ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் பிற அமைப்புகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. அத்துடன் தேர்தல் நடத்துவதாக வாக்குக் கொடுத்த இலங்கை அரசு இப்போது புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்த பின்புதான் தேர்தல் நடத்தப்படும் என்று கூறி தான் அளித்த வாக்குறுதியை காற்றில் பறக்க விட்டது. சிங்கள தீவிரவாத அமைப்பான ஜே.வி.பி.யை நசுக்கி விட்டதைப் போல் விடுதலைப் புலிகளையும் அழித்து விடலாம் என்று எண்ணி, இலங்கை அரசு யுத்தத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் துவங்கியது. வடகிழக்கு மாநிலத்தில் இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகரித்தது. இவ்வாறு இலங்கை அரசு தமிழரின் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதும் உடன்பாடு காண்பதும் அதைமீறி அடக்குமுறை தொடர்வதும் புதியதல்ல.



சான்றாகக் கூறவேண்டுமானால், அண்மையில் இந்திய - இலங்கை ஒப்பந்தப்படி வடகிழக்கு மாகாணத்திற்கு அதிகாரப் பகிர்வு அளிப்பது என்ற கோரிக்கையை அது நிறைவேற்றவேயில்லை. வடகிழக்கு மாநில கவுன்சிலை செயற்பட எப்போதும் அனுமதித்ததும் கிடையாது. இலங்கை அரசு இதுவரை தமிழ்த் தேசிய இனத்தை ஒரு இனமாகக்கூட அங்கீகரித்ததில்லை. இதுவரை எந்தப் பிரச்சினையும் அமைதியாக பேசி தீர்க்க முயற்சித்ததும் இல்லை. விடுதலைப் புலிகளோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறுவதும்கூட அந்த அரசின் வழக்கமான செயல்களில் ஒன்றுதான். இத்தகைய நிலைமையில்தான் "தமிழ் ஈழ தேசிய விடுதலை இயக்கத்தை இந்திய அரசு ஒடுக்கியதைப் போல, இலங்கை அரசும் அதை நசுக்க முயலுமானால் எல்.டி.டி.இ. மீண்டும் ஒருமுறை ஆயுதமேந்தி போரிடத் தயங்காது" என பிரபாகரன் மார்ச் 31-ம் தேதியன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது எச்சரித்தார். இலங்கை அரசு போருக்கான ஆயத்தங்களை செய்யத் துவங்குவது தெரிந்தவுடன் விடுதலைப் புலிகள் எச்சரிக்கையாயினர். எந்த நேரத்திலும் போர் வெடிக்கலாம் என்ற சூழ்நிலை ஏற்பட்டது. போர் நிறுத்த ஒப்பந்தப்படி வடகிழக்கு மாநில முகாம்களில் இருக்கும் இராணுவம், புலிகள் அனுமதி பெற்றுத்தான் வெளியில் வரவேண்டும் என்பதை சிங்கள இராணுவம் மீறியது.

ஜூன் 7-ம் தேதி வவுனியா முகாமிலிருந்து சிங்கள இராணுவம் வெளிவந்தது. புலிகளின் எச்சரிக்கைக்கு கீழ்ப்படிய மறுத்து துப்பாக்கி சூடு நடத்தியதென்றும், ஆகையால் இராணுவத்தின்மீது தாக்குதல் தொடுத்தோம் என்றும் புலிகள் அமைப்பு கூறுகிறது. ஜூன் 7 மற்றும் 11-ம் தேதிகளில் நடந்த இரண்டு மோதல்களைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் கிழக்கு மாநிலத்தில் உள்ள பல காவல் நிலையங்களை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். 800 சிங்கள போலீசாரை சிறைப்பிடித்தனர். யாழ்ப்பாணத்தில் இலங்கை இராணுவம் முகாமிட்டுள்ள கோட்டையை புலிகள் முற்றுகையிட்டனர். முற்றுகையைத் தகர்ப்பதற்கு தாக்குதல் நடத்துவதாகச் சொல்லி யாழ்நகர் மீது சிங்களப்படை தீக்குண்டுகளை வீசின. விடுதலைப் புலிகளைத் தேடி அழிப்பது என்று கூறிக்கொண்டு, ஈழத்தமிழரின் தேசிய விடுதலைப் போரை நசுக்குவதற்கு இலங்கை அரசு ஒரு இனவெறி பாசிச யுத்தத்தை ஈழத்தமிழ் மக்களின்மீது கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் இலங்கை இராணுவத்துக்கும் புலிகளுக்கும் பெரும்போர் மூண்டது. கிழக்கு மாகாணத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விட்டதாக இலங்கை அரசு கூறுகிறது. ஆனால் பி.பி.சி-யோ கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதிகள் தொடர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறுகிறது. புலிகளைச் சுற்றி வளைத்து நசுக்கும் யுத்தத்தை இலங்கை அரசு நடத்துகிறது. சர்வதேச விதிகளையும், போர் ஒழுக்க நெறிகளையும் மீறி இலங்கை இராணுவம் விமானத்திலிருந்து தீக்குண்டுகளை வீசுகிறது. வானிலிருந்து எந்திரத் துப்பாக்கிகள் மூலம் மக்களைச் சுட்டுத்தள்ளுகிறது. முதியவர், பெண்டிர், குழந்தைகள் என்று வித்தியாசம் பாராமல் ஏராளமான மக்களைக் கொன்று குவிக்கிறது. இரண்டு லட்சம் மக்கள் வீடுகளை இழந்து அகதிகளாகியுள்ளனர். மக்களின் உடமைகள் நாசமாக்கப்பட்டன. எந்த நேரத்தில் மரணத்தை எதிர்கொள்ள வேண்டுமோ என அஞ்சி வாழ்கின்றனர். ஈழத் தமிழரின் சமூக வாழ்வு இராணுவ பயங்கரவாத நடவடிக்கைகளினால் சின்னாபின்ன மாக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வியட்நாமில் செய்த யுத்தக் கொடுமைக்கு இணையாக இலங்கை அரசு தனது சொந்த நாட்டு மக்களுக்கு கொடுமைகளைச் செய்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ்ப்பாண தீபகற்பத்தில் நுழைவதற்கு ஏதுவாக கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு சாலையை பாதுகாப்புப்படை கைப்பற்றிக் கொண்டது. இம்மூன்று இராணுவப் பிரிவுகளுக்குள் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டது. யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதலுக்குத் தயார் செய்கிறது. வலுக்கொண்டு தாக்குவதற்காக தன்னிடமுள்ள அனைத்து விமானங்களையும் ஹெலிகாப்டர்களையும் இலங்கைப் படை ஒன்று திரட்டியுள்ளது. யாழ் தீபகத்தின் மீது தாக்குதலைத் தொடுக்கத் தயாராகிவிட்டது. சுருங்கக்கூறின், ஈழத்தமிழரின் தேசிய விடுதலை இயக்கத்தை நசுக்குவதற்காக இலங்கை அரசு ஒரு இனவெறி பாசிச யுத்தத்தை நடத்துவதில் வெறித்தனமாக இருக்கிறது. இனி போர் நிறுத்தமில்லை. கிரிமினல் கும்பலை (புலிகளை) அழிக்கும்வரை ஓயமாட்டோம் என்று இராணுவ அமைச்சர் ரஞ்சன் விஜேயரத்தினே முழங்கினார். மேற்கு ஐரோப்பிய நாடுகளிடமும், பாகிஸ்தானிடமும், இஸ்ரேலிடமும் இராணுவ உதவி கேட்டுள்ளார் பிரேமதாசா. இலங்கை அரசு ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அயல்நாட்டு பிற்போக்கு வாதிகளிடமிருந்து எவ்வளவு இராணுவ உதவிபெற்று வலுக்கொண்டு தாக்கினாலும் புலிகளையும், ஈழத்தமிழரின் தேசிய விடுதலை இயக்கத்தையும் எளிதில் அடக்கிவிட முடியாது.

கிழக்கு மாகாணத்தில் சில நகரங்களை ராணுவம் கைப்பற்றி இருந்தாலும், யாழ்க்கோட்டையை புலிகளின் முற்றுகையை உடைத்து அது கைப்பற்றிக் கொண்டாலும்- இன்னும் பல கிராமங்கள் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. புலிகள் ஒரு நீண்ட கொரில்லா யுத்தத்திற்கான தயாரிப்புகளை செய்து வந்துள்ளதாகவும், காட்டுப் பிரதேசங்களிலிருந்து ஒரு நீண்ட காலத்திற்கு அவர்களால் போராடமுடியும் என்றும் செய்திகள் கூறுகின்றன. சமீபத்தில்கூட விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களில் ஒருவரான கரிகாலன், டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் எல்.டி.டி.இ-யால் இலங்கை இராணுவத்தை வெல்ல முடியுமா? அப்படி வெல்ல முடியுமானால் தமிழ் ஈழத்தை கைப்பற்ற எவ்வளவு காலம் பிடிக்கும்? என்ற கேள்விக்குப் பதில் அளிக்கும் போது "எங்களால் இலங்கை இராணுவத்தை நிச்சயம் வெல்லமுடியும். உலகின் மிகப்பெரிய நான்காவது இராணுவத்திற்கே தண்ணீர் காட்டியிருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்தியர்களால் எங்களை தோற்கடிக்க முடியவில்லை. நாங்கள் ஒரு கொரிலா யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். எனவே இதில் எங்களால் ஒரு கால அளவை முன்கூட்டியே சொல்லமுடியாது. இந்த வகை யுத்தங்கள் நீண்டகாலம் எடுக்கின்றன. வியட்நாம் 35 வருடங்களை எடுத்துக் கொண்டது என்பதை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள். இப்போது இது ஒரு மக்கள் இயக்கம். மேலும் மக்கள் நீண்ட போராட்டத்தை எதிர் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்" எனத் திட்டவட்டமாக இப்போது நடக்கும் யுத்தத்தின் தன்மைபற்றிக் கூறியுள்ளார்.

இப்போது விடுதலைப் புலிகளின் இயக்கம் காடுகளில் பதுங்கி, நகரங்களுக்கு வந்து தாக்கும் கொரில்லாப் போர்முறைக்கு பயிற்சி பெற்றுள்ளதால் புலிகளின் கொரில்லாப் போர் தொடரும். காடுகளுக்குள் சென்று விடுதலைப் புலிகளை அழித்துவிட முடியும் என இலங்கை ராணுவம் கருதினாலும், இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளின் விளைவுகளை ஒரு அனுபவமாக எடுத்துக்கொண்டு பார்ப்போமேயானால், காடுகளில் மேற்கொள்ளப்படும் ராணுவ நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய பெரும் இழப்புகளை இலங்கை ராணுவம்போன்ற ஒரு சிறிய ராணுவத்தினால் தாங்கிக்கொள்ள முடியாது.



எனவே விடுதலைப் புலிகளை எதிர்த்து இலங்கை ராணுவம் நடத்தும் போர் ஒரு நீண்ட போராகவே இருக்கும். ஐந்து பாண்டவர்களை ஒழிக்க நூறு கௌரவர்கள் நடத்திய பாரதப்போர் கதையைப் போன்றுதான் இருக்கும்.

## நீண்ட யுத்தத்தில் திருப்பங்களும் அணிசேர்க்கையும்

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் 1983-ல் ஒரு தேசிய விடுதலை யுத்தம் என்ற வடிவம் எடுத்ததிலிருந்து அது பல்வேறு இடைக் கட்டங்களைக் கடந்து, இன்று இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஓர் உள்நாட்டு யுத்தம் என்ற வடிவத்தை எடுத்திருக்கிறது.

விடுதலைப் போராட்டத்தின் இன்றைய காலகட்டம், இதற்கு முன்கட்டமான இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்த போரிலிருந்து மாறுபட்டது. இன்று நடைபெறும் உள்நாட்டுப் போர் 1983-லிருந்து 1987-ல் இந்தியப்படை இலங்கையில் தலையிடும் வரையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரிலிருந்தும் வேறுபட்டது. இந்த விடுதலைப்போரின் ஒவ்வொரு காலகட்டமும் அதன் அரசியல் சக்திகளின் அணிசேர்க்கையில் உள்ள வேறுபாட்டின் காரணமாகவும், அதன் இராணுவ நடவடிக்கையில் உள்ள வேறுபாட்டின் காரணமாகவும் வேறுபட்டன. எனவே இப்போராட்டத்தின் ஒவ்வொரு காலகட்டத்தின் அரசியல் குறிக்கோளும் முழக்கங்களும் வேறுபட்டவையாக இருந்தன.

1983-ஜூன் கலவரத்திற்கு முன் நடைபெற்ற இலங்கையின் பேரினவாத அரசின் பாசிச தேசிய இன ஒருக்குமுறையை எதிர்த்த தனிநாடு கோரிக்கைக்கான போராட்டத்தில் சமரசசக்திகள் தனிமைப்பட்டு போராளிக்குழுக்கள் தீர்மானகரமான சக்தியாக வளர்ந்தன. பாராளுமன்ற வாதமும் சீர்திருத்த முறைகளும் செல்வாக்கிழந்தன. தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு புரட்சிகரப் போராட்டப் பாதையில் முன்னேறுவதற்கான வாய்ப்பு உருவாயிற்று. இலங்கையின் பேரினவாத அரசின் பாசிச தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்த்து பரந்துபட்ட மக்கள், குறிப்பாக பல்வேறு போராளிக் குழுக்களின் பின்னால் அமைப்பு ரீதியாகத் திரண்டனர்.

எனினும் இவ்வமைப்புகள் பெரும்பாலும் குட்டி முதலாளித்துவ (சிறு உடமை) வர்க்கத்தினரைக் கொண்டவையாக இருந்தன. இவ்வமைப்புகளின் வர்க்கத்தன்மையின் காரணமாக தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பற்றி அவை ஒரு குறுகிய கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தன. இலங்கை நாட்டிலுள்ள வர்க்க முரண்பாடுகளைக் கையாள்வதைப் பற்றிய சரியான கருத்துகளையும், மலையகத் தமிழ் மக்களுடன் ஐக்கியப்படுவதற்கான அணுகுமுறையையும் சிங்கள உழைக்கும் மக்களை வென்றெடுப்பதற்கான கண்ணோட்டத்தையும் இவ்வமைப்புகள் கொண்டிருக்கவில்லை. இப்போராளி அமைப்புகளில் எவையும் தேசிய இன விடுதலைப் புரட்சிக்கான திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. இலங்கை அரசின் தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்த்து இப் போராளிக்குழுக்கள் போராடினாலும், அவை தமக்குள் உள்ள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு பகையான முறைகளையே கையாண்டன. இதன் விளைவாக இலங்கைப் பேரினவாத அரசின் பாசிசத்தை எதிர்த்து ஒரு ஐக்கிய முன்னணியை இவ்வமைப்புகளால் உருவாக்க இயலவில்லை. மேலும், அரைக் காலனிய இலங்கை நாட்டின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் சிங்கள ஆளும் வர்க்கங்களுக்கும் இலங்கை அரசுக்கும் எதிரானதாக இருப்பது மட்டுமல்லாமல், அது ஏகாதிபத்திய வாதிகளுக்கும், இந்திய ஆளும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வர்க்கங்களின் விஸ்தரிப்பு வாதத்திற்கும் எதிரானதாக இருக்கிறது என்பதை இப் போராளிக்குழுக்கள் உணரவில்லை. இதன் காரணமாக இந்திய அரசு பாகிஸ்தானில் தலையிட்டு வங்காள தேசத்தை பிரித்தது போல், இலங்கையிலும் அது தலையிட்டு "ஈழ தேசத்தை" பிரித்து அவர்களிடம் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் முழங்கினார்கள்.

1983-ஜுன் கலவரத்திற்கு பிறகு ஈழத் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் ஒரு உள்நாட்டு யுத்தம் என்ற வடிவத்தை எடுத்தபோது, இந்தியாவை குறிப்பாக தமிழகத்தை தமது பின்புலமாக இக்குழுக்கள் பயன்படுத்திக் கொண்டன. இந்திய அரசு ஈழப் போராளி அமைப்புகளுக்கு பயிற்சியையும், ஆயுதங்களையும் வழங்கியது. இலங்கை ஆளும் வர்க்கங்களுக்கும், இந்திய ஆளும் வர்க்கங்களுக்கும் இடையிலான முரண்பாட்டை இப் போராளிக் குழுக்கள் பயன்படுத்த முயற்சித்ததைப் போலவே இந்திய ஆளும் வர்க்கத்தினரும் இந்திய அரசும், ஈழப் போராளிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டையும், ஈழப் போராளி அமைப்புகளுக்கிடையில் உள்ள முரண்பாட்டையும் தமது மேலாதிக்க நோக்கத்திற்காகப் பயன்படுத்த முயற்சித்தன.

இதன் விளைவு செல்வத்தின் "டெலோ", பத்மநாபாவின் "ஈ.பி.ஆர்.எல்.எப்.", முகுந்தனின் "பிளாட்", ஆகிய அமைப்புகள் மத்திய சர்க்காரை சார்ந்து நின்றன என்றால், பிரபாகரனின் "எல்.டி.டி.இ." அதன் தோழமை அமைப்பான பாலகுமாரனின் "ஈரோஸ்" ஆகிய அமைப்புகள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரை நம்பி செயல்பட்டன. இந்தியாவிலுள்ள ஜனநாயக சக்திகளையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் சார்ந்து நிற்பதற்கு மாறாக மத்திய மாநில அரசாங்கங்களைச் சார்ந்து நின்றனர். எனினும் விடுதலைப் புலிகளின் அமைப்பு (எல்.டி.டி.இ) எம்.ஜி. ஆரின் உதவியைப் பெற்றாலும், ஈழத்தில் தனது சொந்த இராணுவ வன்மையை வளர்த்துக் கொண்டு இலங்கை அரசின் பாசிச தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்து தீவிரமாகப் போரிட்டது. உள்நாட்டு யுத்தத்தின் முதன்மையான சக்தியாக வளர்ந்து அப்போரை தீர்மானிக்கும் சக்தியாக ஆயிற்று.

இந்திய அரசு இலங்கையின் மீது தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டும் நோக்கத்திற்காக, இலங்கை அரசை நிர்ப்பந்திப்பதற்கு தமிழ்ப் போராளிக் குழுக்களைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தது. 1983-லிருந்து இவ்வாண்டு மார்ச் மாதம் வரை இந்திய அரசு தனது மேலாதிக்க நோக்கத்தை அடைவதற்காக மூன்று அம்சங்களைக் கொண்ட ஒரு கொள்கையைப் பின்பற்றியது.

1. இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை என்ற வழக்கமான ராஜதந்திர முறைகளையும் பயன்படுத்துவது.
2. போராளிக் குழுக்களுக்கு பயிற்சியையும், ஆயுதங்களையும் வழங்குவதன் மூலம் மறைமுகமாகத் தலையிடுதல்.
3. இறுதியாக, இந்திய "அமைதிக் காக்கும் படை"யின் மூலம் நேரடியாகத் தலையிடுதல்.



இக் கொள்கையைச் செயல்படுத்தும் பொருட்டே, திம்புவில் ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்தது. இலங்கை அரசிலிருந்து - ஒடுக்கும் சிங்களத் தேசிய இனத்திடமிருந்து, ஈழத் தமிழ் தேசிய இனம் பிரிந்து செல்லாமலும், இராணுவ வழியில் அல்லாமல் அரசியல் வழியிலும், ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்று இந்திய அரசு திம்புப் பேச்சு வார்த்தையின் போது கூறிற்று. மேலும், ஈழத் தமிழரின் தேசிய இனச் சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு சுயநிர்ணய உரிமைக்கு மாற்றாக இந்தியாவில் மாநிலங்கள் பெற்றிருப்பதைப் போன்ற அதிகாரம் சுயாட்சி (Self Rule) என்றும், அதிகாரத்தை கீழ் மட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் முறை என்றும் ஒரு தீர்வை இந்திய அரசு முன்வைத்தது.

திம்புப் பேச்சுவார்த்தையின் போது, "ஈழத்தமிழர்களின் தனிநாடு அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்கான காரணங்களும் அவசியமும் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது" என நாம் எடுத்துக் காட்டினோம். அதேநேரத்தில், ஈழத்தமிழர் விடுதலை இயக்கங்கள் மேற்கொள்ள வேண்டிய செயல் தந்திரத்தை பின்வருமாறு எடுத்துரைத்தோம். "இலங்கைவாழ் இரு தேசிய இனங்களும் ஒரே அரசுக்குள் இணைந்து வாழ வேண்டுமாயின், ஈழத்தமிழினத்திற்குப் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். ஈழத்தமிழ் மக்கள் இவ்வரசிற்குள் வாழ்வது சகிக்கமுடியாதது எனக்கருதி பிரிந்து போக விரும்பினால் அவர்களிடையில் சர்வஜன வாக்கெடுப்பின் அடிப்படையில் தீர்வுகாண இலங்கை அரசியல் சட்டத்தில் உத்தரவாதம் அளிக்க வேண்டும்." இதுவே இந்திய ஆளும் வர்க்கங்களும், பிற்போக்காளர்களும் வைத்த தீர்வுக்கு மாற்றாக நாம் வைத்த தீர்வு.

இலங்கையின் மீது தனது மேலாதிக்கத்தைத் திணிப்பதற்கும், அதற்கு ஏற்றாப்போல ஈழத் தேசிய இனச்சிக்கலைத் தீர்ப்பதற்கும் உகந்த முறையில் வைக்கப்பட்ட இந்திய அரசின் தீர்வை ஈழ விடுதலைப் போராளிக் குழுக்கள் ஏற்கவில்லை. அமிர்தலிங்கத்தின் "தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி" (டி.யு.எல்.எப்.) என்ற அமைப்பு இந்திய அரசின் தீர்வை ஏற்க விரும்பினாலும், அது ஒரு செல்லாக்காசாக இருந்தது. அது இத்தீர்வை ஏற்றாலும் எப்பயனுமில்லை, ஆகையால் இந்திய அரசின் இக் கொள்கையை போராளிக் குழுக்களின்மீது திணிக்கும் பொருட்டு, இந்திய அரசின் உளவுப் படையான "ரா" (Raw) போராளிக் குழுக்களுக்கிடையிலான முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு அவற்றைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சி செய்தது. இக் குழுக்களுக்கிடையில் "சகோதர யுத்தங்களை" தூண்டிவிட்டது. பிரபாகரனின் "எல்.டி.டி.இ"க்கு எதிராக "பிளாட்", "டெலோ" மற்றும் "ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய அமைப்புக்களை ஒரு முன்னணிக்குள் கொண்டு வந்தது. அதுவரையில் போராளிக் குழுக்கள் தமக்குள் போரிட்டுக் கொண்டிருந்தாலும், எந்தவொரு ஆளும் வர்க்கத்தின் கைப்பாவையாக மாறாது இருந்த இந்த குழுக்களில் சில இந்திய (ஆளும் வர்க்கங்களின்) அரசின் கைப்பாவையாக மாறிவிட்டன.

இவ்வாறு ஒரு புறம், சில போராளி அமைப்புக்களைத் தனது கைப்பாவைகளாக மாற்றிக் கொண்டது. மறுபுறம், இலங்கை அரசை எதிர்த்து ஈழமக்கள் நடத்திய போராட்டங்களை, குறிப்பாக புலிகளின் ஆயுதப் போராட்டத்தை பயன்படுத்திக் கொண்டு இலங்கை அரசை நிர்ப்பந்தித்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதன்மீது இந்திய அரசு ஓர் ஒப்பந்தத்தை திணித்தது. ஆயினும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் (ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம்) ரஷ்ய சமூக ஏகாதிபத்தியம் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் ஒப்புதலுடன்தான் செய்யப்பட்டது. அவற்றின் ஒப்புதலுடன்தான் இந்திய அரசு தனது "அமைதி காக்கும் படையை" இலங்கைக்கு அனுப்பியது. தமிழரின் கோரிக்கைகளைச் செயல்படுத்துவதற்காகவே இந்தியப்படை அனுப்பப்படுவதாக இந்திய அரசு கூறிக்கொண்டாலும், உண்மையில் அதன் நோக்கம் இலங்கையின் அரைக் காலனித்துவ அரசமைப்பை நிலைநிறுத்துவதும் ஈழத்தமிழரின் தேசிய இன விடுதலை இயக்கத்தை நசுக்குவதும், இலங்கையின்மீது இந்திய அரசின் மேலாதிக்கத்தை நிறுவுவதுமே ஆகும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பெயரால் இந்திய "அமைதி காக்கும் படையின்" மூலம் இந்திய அரசு இலங்கையில் நேரடியாகத் தலையிட்டது.

இத் தலையீட்டில் இரண்டு அம்சங்கள் அடங்கியுள்ளன. ஒன்று, இலங்கை முழுவதின் மீது தன் மேலாதிக்கத்தை திணிப்பது. மற்றொன்று, இலங்கையின் ஜனநாயக விரோத அரசு அமைப்பை நிலைநிறுத்துவதும், ஈழத்தமிழ் தேசிய இனத்தின் விடுதலை இயக்கத்தை (சுயநிர்ணய உரிமைப் போரை) நசுக்குவது - இந்தியாவின் மாநிலங்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கும் ஜனநாயக விரோத, சீர்திருத்த முறையைத் திணிப்பது. ஆகையால் இத் தலையீடு ஈழத் தமிழர்களுக்கு மட்டும் எதிரானதல்ல. இலங்கை முழுவதற்கும் - இரு தேசிய இன மக்களுக்கும் எதிரானதாகும். இந்திய மேலாத்திக்கத்தை எதிர்ப்போர் அனைவரையும் ஓர் அணிக்குள் கொண்டுவர வேண்டியது முதன்மையான கடைமையாகிறது. மேலாதிக்கத்தை எதிர்ப்போர் அனைவரையும் ஐக்கியப்படுத்துவதற்கு ஈழத்தமிழர் கோரிக்கை தடையாக இல்லாமல் இருக்கும் பொருட்டு, தனிநாடு கோரிக்கைக்கு மாறாக சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை இச் செயல்தந்திர காலகட்டத்தின் கோரிக்கையாக மாற்றியமைத்துக் கொள்வது அவசியமாகிறது. ஏனெனில், இந்திய மேலாதிக்கம் திணிக்கப்படுவதை முறியடிப்பது - இந்திய ஆக்கிரமிப்புப் படையை இலங்கையை விட்டு வெளியேற்றுவது அல்லது அதைத் தோற்கடிப்பது ஈழத்தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமானது. அப்படிச் செய்யாவிட்டால் தேசிய இன விடுதலைப் போராட்டம் நசுக்கப்பட்டு விடலாம்.

எனவே இந்திய அரசின் மேலாதிக்கத்தை எதிர்த்து இலங்கைவாழ் அனைத்து மக்களையும் திரட்டும் பொருட்டு, இரு இனங்களையும் சேர்ந்த மேலாதிக்க எதிர்ப்புச் சக்திகளை ஒன்று திரட்டும் பொருட்டு, ஈழத்தமிழ் தேசிய இன விடுதலை இயக்கத்தின் செயல் தந்திரத்தில் மாற்றம் செய்யப்படுவதைக் கோரிற்று. இந்திய மேலாதிக்கத்தை எதிர்ப்பதும், ஈழத்தமிழ் தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமையைக் கோருவதும் இக் காலகட்டத்தின் செயல் தந்திரத்தின் உள்ளடக்கமாயிற்று. இவை இரண்டிலும்கூட முதலாவதற்கு இரண்டாவதை உட்படுத்திப் பார்ப்பது அவசியமாகும்.

இந்திய "அமைதி காக்கும்" படை இலங்கையில் தலையிட்டதும், ஆயுதங்களை ஒப்படைத்து விடுமாறு அனைத்து ஈழப்போராளி அமைப்புகளுக்கும் அது ஆணை பிறப்பித்தது. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்க மறுத்து ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்துவிட்டது. ஈழத்தமிழரின் தேசிய இன விடுதலைப்போர் ஒரு



புதிய கட்டத்திற்குள் - இந்திய மேலாதிக்கத்தை எதிர்த்த கட்டத்திற்குள் நுழைந்தது. விடுதலைப் புலிகளுக்கும் இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கும் இடையில் நடந்த யுத்தம், மீண்டும் அரசியல் சக்திகளின் அணிசேர்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. முதலில் ஈழத் தமிழ்நாட்டின் அரசியல் சக்திகளுக்கு இடையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்தது. அப்போர் கூர்மை அடைந்ததும் இலங்கையில் ஒட்டு மொத்தமான அரசியல் சக்திகளின் அணிச்சேர்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. இந்திய ஆக்கிரமிப்புப்படை தலையிட்டதும் இந்திய அரசும் இலங்கை அரசும் கூட்டாகச் சேர்ந்து ஈழத்தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்கின. இந்தியப் படையின் தலையீட்டிற்குப் பிறகு ஈழத்தமிழரின் தேசிய இன விடுதலை இயக்கம் இரண்டாகப் பிளவுபட்டு ஒன்றை ஒன்று எதிர்க்கும் இரண்டு அணிகளாக அமைந்தன. ஒன்று இந்திய மேலாதிக்கத்தை எதிர்க்கும் அணியாகவும், மற்றொன்று மேலாதிக்கத்தை எதிர்த்த போரில் இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு சேவை செய்யும் ஒரு அணியாகவும், இந்தியப்படை நடத்திய ஒரு போலித்தனமான தேர்தலில் பங்குகொண்டு வடகிழக்கு மாகாணக் கவுன்சிலில் உட்கார்ந்த பொம்மை அமைச்சரவையாகவும் மாறிவிட்டது.

இதன் விளைவாக இந்திய இலங்கை அரசுகளும் அவற்றுடன் இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு ஐந்தாம் படையாகச் சேவை செய்து தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு துரோகமிழைத்த குழுக்களான "ஈ.பி.ஆர்.எல்.எப்.","டெலோ" மற்றும் "பிளாட்" ஆகியன இந்திய மேலாதிக்கத்தை திணிப்பதற்கும் ஈழத்தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்குமான ஒரு அணியாக அமைந்தது. அதை எதிர்த்து விடுதலைப் புலிகள் தனித்து நிற்க வேண்டியதாயிற்று. அரசியல் சக்திகளுக்கிடையில் அணிசேர்க்கையில் ஏற்பட்ட மாற்றம் ஈழத்தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு பாதகமாகவே அமைந்தது. எனினும் இந்திய ஆக்கிரமிப்பு படையை எதிர்த்து புலிகள் உறுதியாகப் போரிடத் துவங்கியதும் சூழ்நிலைமையில் மாற்றம் ஏற்படலாயிற்று.

இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்து விடுதலைப் புலிகள் நடத்திய யுத்தம் ஏராளமான ஈழத்தமிழ் இளைஞர்களைத் தட்டியெழுப்பி அவர்களை விடுதலை யுத்தத்திற்கு கொண்டுவந்து சேர்த்தது. பரந்துபட்ட மக்கள் இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்து விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்தனர். இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு ஐந்தாம் படையாகச் செயல்பட்ட ஈழத்தமிழ் குழுக்கள் மக்களிடமிருந்து தனிமைப்பட்டன. புலிகளை எதிர்த்த யுத்தத்தில் அவை சிதறுண்டு சின்னாபின்னமாய்ப் போய்விட்டது. இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்த போராட்டம் தமிழர்கள்மீது சிங்கள மக்கள் கொண்டிருந்த பகை மனப்பான்மையை ஓரளவிற்கு மாற்றியமைத்தது. அத்துடன் அது சிங்கள மக்களிடையிலும் இந்திய மேலாதிக்கத்திற்கும், இலங்கை அரசின் பாசிசத்திற்கும் எதிரான உணர்வைத் தட்டி எழுப்பிற்று. இலங்கை அரசு ஆதிபத்திய உரிமையை விட்டுக் கொடுத்து இந்திய மேலாதிக்க வாதிகளுக்கு பணிந்து இந்திய ஆக்கிரமிப்புப் படையை இலங்கையில் தலையிட அனுமதித்ததை எதிர்த்தும், பாசிச இலங்கை அரசின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்தும், உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் சுமையை இலங்கை அரசு மக்கள் மீது திணிப்பதை எதிர்த்தும், சிங்கள இன மக்களுக்கிடையில் எதிர்ப்பு வளரலாயிற்று. இலங்கை அரசு சிங்கள மக்களிடமிருந்தும் தனிமைப்பட்டது. ரோஹன விஜயவீராவின் தலைமையில் ஜெ.வி.பி. அமைப்பு இலங்கை அரசை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தை துவங்கிற்று. இலங்கை அரசை நிலைகுலையச் செய்யும் அளவிற்கு மக்களின் போராட்ட அலை வீசிற்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வாறு இந்திய அரசின் மேலாதிக்கத்தை எதிர்த்து இரண்டு நிகழ்ச்சிப் போக்குகள் இலங்கையில் தோன்றின. ஒன்று இந்திய மேலாதிக்கத்தை எதிர்த்து விடுதலைப் போராளிகளின் ஈழத்தேசிய இன விடுதலைப் போராட்டம். மற்றொன்று இந்திய மேலாதிக்கத்தையும், இலங்கை அரசின் பாசிச ஒடுக்கு முறையையும் எதிர்த்த ஜெ.வி.பி.யின் தலைமையிலான சிங்களரின் போராட்டம். இவ்விரண்டு சக்திகளும் ஐக்கியப்பட்டு ஒரே அணியில் நின்று போராடாமல் தனித்தனியாக போரிட்டன. என்றாலும், இப்போராட்டங்களின் விளைவாக ஈழத்தேசிய இன விடுதலை இயக்கத்தின் எதிரிகளின் முகாமில் முரண்பாடுகள் தோன்றின. அரசியல் சக்திகளின் அணிசேர்க்கையில் ஒரு மாற்றத்தையும் கொண்டுவந்தது. இந்திய ஆக்கிரமப்புப் படை இலங்கையைவிட்டு வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையின் மீது விடுதலைப் புலிகளுக்கும், பிரேமதாசா அரசாங்கத்திற்கும் இடையில் கருத்தொற்றுமை இருந்ததின் காரணமாக இவை இரண்டும் ஒரு உடன்பாட்டிற்கு வந்தன. இதன் விளைவாக இந்திய ஆக்கிரமிப்புப் படை இலங்கையை விட்டு வெளியேறியது. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஓர் போர் ஒய்வு ஒப்பந்தம் ஏற்பட்டது.

இந்திய மேலாதிக்கத்தை எதிர்த்த - இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்த கட்டத்தில் புலிகள் மேற்கொண்ட செயல்தந்திரங்களை பற்றியும், அவை குறித்த பாட்டாளி வர்க்க இயக்கத்தின் அணுகுமுறையையும், நிலைப்பாட்டையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோம்.

இந்திய மேலாதிக்க வாதிகளுடன் இந்திய ஆக்கிரமிப்புப் படையுடன் பிற ஈழப்போராளி அமைப்புகள் சமரசம் செய்து கொண்டதுபோல விடுதலைப்புலிகள் அமைப்பும் சமரசம் செய்து கொள்ளுமோ என்ற ஐயம் ஏற்பட்டது. ஆனால் அதற்கு முன்கட்டத்தில் இலங்கை அரசின் பாசிச தேசிய ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்துப் போரிட்டதைப் போலவே இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்தும் உறுதியுடன் போரிட்டது. விடுதலைப் புலிகள் பணிந்திருந்தால் ஈழத்தேசிய விடுதலை இயக்கம் முழுவதுமாக சீரழிந்து போயிருக்கும். இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்து அது போரிட்டது மட்டுமல்லாமல், இந்திய மேலாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்திற்கு தமிழ் ஈழத் தேசிய இன சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையை உட்படுத்திப் பார்த்து, இலங்கை அரசுடன் கருத்துடன்பாடு கண்டு இந்திய ஆக்கிரமிப்பு படையை இலங்கையை விட்டு வெளியேற்றுவதற்கு வழிவகுத்தது. அவ்வாறு செய்யாதிருந்தால் இந்திய அரசு இலங்கைமீது தனது மேலாதிக்கத்தைத் திணிப்பதில் வெற்றி பெற்றிருக்கக்கூடும். ஆகையால் விடுதலைப் புலிகள் அமைப்பு இக்கட்டத்தில் இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நிலவிய முரண்பாட்டை சரியாகவே கையாண்டது எனக்கூறலாம். இக் கட்டத்தில் அது இலங்கை அரசுடன் போர்ஒய்வு உடன்பாடு கண்டதும் ஒரு சரியான செயல்தந்திரமே ஆகும்.

இந்திய மேலாதிக்கத்தை எதிர்த்த போராட்டத்தில் சிங்கள மக்களுடன் ஒற்றுமை காண்பதில் விடுதலைப் புலிகள் அமைப்பின் கண்ணோட்டம் விமர்சிக்கப்பட வேண்டியதாயினும், இப் போராட்டத்தில் இரு தேசிய இனங்களின் மக்களை ஓர் அணிக்குள் கொண்டு வர முடியாமற் போனதற்கு அது ஒன்றே காரணம் அல்ல. ஒடுக்கப்படும் தமிழ் ஈழத் தேசிய இனத்தின்மீது ஒடுக்கும் சிங்களத் தேசிய இனமும், அத் தேசிய இன ஒடுக்குமுறையாளரின் அரசும் அடக்குமுறை தொடுப்பதை எதிர்த்து ஒடுக்கும்



சிங்கள தேசிய இனத்தைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் போராடாதவரை, இவ்விரு தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களை ஒன்றுபடுத்துவதோ அல்லது ஓர் அணிக்குள் கொண்டுவருவதோ சாத்தியமானதல்ல. தவிர, இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்த விடுதலைப் புலிகளின் போராட்டமும், அதன் செயல்தந்திரமும் இலங்கைமீது இந்திய மேலோதிக்கம் திணிக்கப்படுவதை முறியடிப்பதில் பெரும் பங்காற்றியிருப்பதே. அது புறவயமாக ஒரு புரட்சிகரமான பாத்திரத்தை ஆற்றியுள்ளது எனச் சொல்லலாம்.

வேறுவிதமாகச் சொன்னால் தமிழீழ தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் அரைக் காலனித்துவ இலங்கையின் விடுதலைக்கும் - ஒடுக்கும் சிங்களத் தேசிய இனத்தின் விடுதலைக்கு உதவி செய்கிறது. எவ்வாறென்றால் அரைக் காலனித்துவ இலங்கை அரசின் ஆளும் வர்க்கத்தினரான சிங்களப் பேரினவாதிகள்தான், தங்களின் ஜனநாயகமற்ற அரசமைப்பைக் கட்டிக்காக்கவும் ஈழத் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காகவும் இந்தியா தனது மேலாதிக்கத்தை திணிக்கும் ஒப்பந்தத்தை செய்தார்கள். 1971-ல் ஜெ.வி.பி.-யின் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை நசுக்கவும், அரைக்காலனித்துவ அரசை நிலைநிறுத்தவும் இந்தியப் படையை அழைத்தவர்களும் அவர்கள்தான் என்பதை நினைவில் கொண்டால் இதை உணரலாம். இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்து விடுதலைப்புலிகள் நீண்டகால யுத்தத்தை மேற்கொண்டார்கள். தேசிய விடுதலைப் போரில் விடாப்பிடியாக ஊன்றி நின்றார்கள்.

ஈழத் தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்காக விடாப்பிடியாகப் போரிட்டாலும், விடுதலைப்புலிகள் அமைப்பு ஜனநாயக மறுப்பு மற்றும் எதேச்சதிகார முறைகளையே கடைப்பிடித்தது. இந்திய மேலாதிக்கத்தை எதிர்த்து, ஈழத் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்போருக்கும் மற்றும் பிற ஜனநாயக சக்திகளுக்கும்கூட அவர்கள் ஜனநாயக உரிமைகளை மறுத்தார்கள். இத்தகைய புரட்சிகரமான ஜனநாயக சக்திகளின்மீது அடக்குமுறையைத் தொடுத்தார்கள். ஒரு படையின் சர்வாதிகாரம் (புலிப்படையின் சர்வாதிகாரம்) என்ற பாசிசக் கொள்கையைச் செயல் படுத்தினார்கள். தங்கள் செல்வாக்கிற்குட்பட்ட பிரதேசங்களில் மக்களிடம் அதிகாரத்தை ஒப்படைக்கவில்லை. மக்கள் கமிட்டிகளுக்கு அதிகாரம் என்ற ஜனநாயக ஆட்சிமுறைக்கு மாறாக ஒரு இராணுவ அதிகார வர்க்க ஆட்சிமுறையைச் செயல்படுத்தினர். நிலச் சீர்திருத்தம் மற்றும் உழைக்கும் மக்களின் வாழ் நிலைமைகளை அபிவிருத்தி செய்தல் ஆகியவை பற்றி அவர்கள் கவலைப்படவே இல்லை.

மேற்கூறப்பட்ட அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால், விடுதலைப் புலிகளின் அமைப்பு தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்த்து விடாப்பிடியாகப் போரிட்டது. அதேநேரத்தில் அது ஜனநாயக மறுப்பு மற்றும் எதேச்சதிகார முறைகளைக் கடைப்பிடித்தது என்பதைக் காணலாம். விடுதலைப் புலிகளின் அமைப்பு ஜனநாயக மறுப்பு மற்றும் எதேச்சதிகார முறைகளைக் கடைப்பிடிப்பதன் காரணமாகவே அதை இந்திய மேலாதிக்கவாதிகளுடனோ அல்லது பாசிச தேசிய ஒடுக்குமுறையாளனான பிரேமதாசா அரசுடனோ பாட்டாளி வர்க்க இயக்கம் சமப்படுத்திப் பார்க்கலாமா? கூடாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அப்படியானால், நாம் இப்பிரச்சினையை எப்படிப் பார்க்கவேண்டும்? ஈழத்தமிழ் தேசீய இன விடுதலைப் போராட்டத்தின் இரண்டு பிரச்சினைகள் உள்ளன. ஒன்று, ஈழத்தமிழ் தேசிய இனத்தின் அரசியல் முன்னேற்றம்; மற்றொன்று, தேசிய இனவிடுதலை யுத்தத்தில் விடாப்பிடியாக இருப்பது. இவை இரண்டும் பிரிக்கமுடியாதவை. "அரசியல் முன்னேற்றம் எந்த அளவிற்கு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவிற்கு அதிகமாக விடுதலைப் புரட்சிச் சக்திகள் யுத்தத்தில் விடாப்பிடியாக இருக்கமுடியும். யுத்தத்தில் விடுதலைப் புரட்சிச் சக்திகள் எந்த அளவிற்கு விடாப்பிடியாக இருக்கிறதோ அந்த அளவிற்கு அரசியல் முன்னேற்றம் அதிகமாக இருக்கும். ஆனால் அடிப்படையாக எல்லாமே விடுதலைப் புரட்சி சக்திகள் யுத்தத்தில் விடாப்பிடியாக தங்கி இருப்பதில்தான் தங்கியுள்ளது." (கருத்தாக்கம் - நீண்டகால யுத்தம் பற்றி மாவோ)

விடுதலைப் புலிகளின் ஜனநாயக மறுப்பும் எதேச்சதிகார முறைகளும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அது தேசிய இன ஒடுக்குமுறையை அல்லது இந்திய மேலாதிக்கத்தை எதிர்ப்பதற்கான மக்களின் பலத்தின் வளர்ச்சியை பாரதூரமாக தடைப்படுத்தி, இதன் விளைவாக அது தேசிய விடுதலைப் புரட்சிகர சக்திகளின் வெற்றிகளின் அளவைக் குறைத்து, விடுதலைப் போராளிகளுக்கு இழப்பை ஏற்படுத்தின. என்றாலும், இலங்கையிலும், இந்தியாவிலும், உலகிலும் இன்றுள்ள ஒட்டுமொத்தமான நிலைமைகளும் பெரும் படைபலம் படைத்த ஒரு பெரும் நாடு ஒரு சிறிய நாட்டின் தேசிய விடுதலைக்கான மக்கள் யுத்தத்தை நசுக்கிவிட முடியாது என்பதை அண்மைக்கால அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஆகையால் இந்திய ஆக்கிரமிப்புப் படையையோ அல்லது இலங்கை அரசையோ எதிர்த்து ஈழத்தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டம் முன்னேற்றமடைவது சாத்தியமானதுதான். முன்னேற்றத்தை தடைப்படுத்துவதாக உள்ள விடுதலைப் புலிகளின் ஜனநாயக மறுப்பும் எதேச்சதிகாரப் போக்கும் காரணமாக விடுதலைப் போராட்டத்தின் முன்னேற்றம் மெதுவானதாகவே இருக்கும்.

முன்னேற்றமும் முன்னேற்றத்தின் குறைந்த வேகமும் தற்போதைய நிலைமையின் இரு குணாம்சங்கள். இவற்றில் இரண்டாவது குணாம்சம் யுத்தத்தின் அவசரத் தேவைகளுடன் இணங்காது. இது தேசிய விடுதலைப் புரட்சியில் அக்கறை கொண்டவர்களுக்கு பெரும் கவலையைத் தோற்றுவிப்பதாக இருக்கின்றது. ஆனால் விடுதலைப் புலிகள் ஒரு புரட்சிகர யுத்தத்தின் நடுவில் உள்ளனர். புரட்சி யுத்தம் என்பது நஞ்சைப் போக்கும் ஓர் எதிர் நஞ்சு. அது எதிரியின் நஞ்சைப் போக்குவது மாத்திரமல்ல. நமது சொந்த அழுக்கைக்கூட (விடுதலைப் போராளிகளின் அழுக்கைக்கூட) சுத்திகரிக்கிறது. நீதியான ஒவ்வொரு புரட்சி யுத்தத்துக்கும் பிரம்மாண்டமான ஆற்றல் உண்டு. அது பல பொருட்களை மாற்றக்கூடியது. அல்லது அவற்றின் மாற்றத்துக்கான பாதையை திறக்கக் கூடியது. (மாவோ).

ஈழத்தமிழரின் இந்திய ஆக்கிரமிப்பாளரை எதிர்த்த யுத்தம் ஈழம், இலங்கை, இந்தியா ஆகிய மூன்று நாடுகளையும் மாற்றக்கூடியது. விடுதலைப் புலிகள் (இந்த மேலாதிக்கத்தை எதிர்த்த யுத்தத்திலும்) ஐக்கிய முன்னணியிலும் அழுத்தமாக நின்றால் பழைய இந்தியா, புதிய இந்தியாவாக மாறுவதும், பழைய இலங்கை புதிய இலங்கையாக மாறுவதும் ஒடுக்கப்பட்ட ஈழத் தமிழ் தேசிய இனம் ஒரு விடுதலை பெற்ற இனமாக மாறுவதும் சாத்தியமானதே.



ஆகையால் விடுதலைப் புலிகள் ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் ஊன்றி நிற்கும்வரை அவர்களை ஒடுக்குமுறை யுத்தத்தை நடத்துபவர்களுடன் சமப்படுத்தி பார்க்காமல், தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்த போராட்டத்தில் அவர்களுடன் ஒற்றுமையையும், அவர்களின் ஜனநாயக மறுப்பு மற்றும் எதேச்சதிகாரப் போக்குகளை எதிர்த்த போராட்டமும்தான் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் அணுகுமுறையாக இருக்கவேண்டும். விடுதலைப் புலிகள் தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடும் வரையில் பாட்டாளி வர்க்கம் இயக்கம் அவர்களுடன் ஒற்றுமையும், போராட்டமும் என்ற உறவையே கொள்ளவேண்டும். தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்த்த போராட்டத்தில் அவர்களுடன் ஒரு குறிப்பான திட்டத்தின் அடிப்படையில் ஐக்கிய முன்னணியைக் கட்டுவதை பாட்டாளி வர்க்க இயக்கம் தனது செயல்தந்திரமாக கொள்ளவேண்டும்.

சீனாவில் ஜப்பானிய எதிர்ப்பு யுத்த காலத்தில், சீனப் பாட்டாளி வர்க்க இயக்கம் ஜப்பானிய பாசிச ஆக்கிரமிப்பாளர்களுடன் பாசிச சியாங்கே ஷேக்கை சமப்படுத்திப் பார்க்காமல், ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து சியாங்கே ஷேக்குடன் ஒரு ஐக்கிய முன்னணியைக் கட்டும் செயல் தந்திரத்தை மேற்கொண்டதுபோல, இந்திய மேலாதிக்கத்தையும் இந்தியப்படையின் ஆக்கிரமிப்பையும் எதிர்த்த போராட்டத்தில் விடுதலைப் புலிகளுடன் ஈழ மற்றும் இலங்கைப் பாட்டாளி வர்க்க இயக்கம் ஓர் ஐக்கிய முன்னணியை கட்டும் செயல் தந்திரத்தை மேற்கொள்வது சரியானது என சீனப் புரட்சியின் அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்திய மேலாதிக்கவாதிகளை எதிர்த்த, இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்த யுத்தத்தில் விடுதலைப் புலிகளுடன் பாட்டாளி வர்க்க இயக்கமும், ஜனநாயகச் சக்திகளும் ஒரு ஐக்கிய முன்னணியைக் கட்டமுடியாமல் போனதற்கு காரணம் என்ன? விடுதலைப் புலிகள் அமைப்பு கடைப்பிடித்த ஜனநாயக மறுப்பு மற்றும் எதேச்சதிகாரப் போக்குகளும், அவர்களுடைய ஒரு படையின் சர்வாதிகாரம் அதாவது அனைத்து அதிகாரங்களையும் ஏகபோகமாக்கிக் கொள்வது என்பதுதான் முதன்மையான காரணமாகும். பாட்டாளி வர்க்க இயக்கமும் மற்றும் பிற ஜனநாயக சக்திகளும் பலவீனமாக இருப்பதும், தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான ஒரு திட்டத்தையும், தெளிவான செயல்தந்திரக் கொள்கைகளைக் கொண்டிருக்காததும் ஒரு காரணமாகும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனையை வழிகாட்டியாகக் கொண்ட ஒரு பாட்டாளி வர்க்க கட்சி இலங்கையிலும், ஈழத்திலும் இல்லாதிருப்பதும் காரணமாகும். இவற்றுடன் இந்தியா முழுவதிலும் - குறிப்பாகத் தமிழகத்திலும் பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கமும், ஜனநாயக சக்திகளும் மிகப் பலவீனமாக இருப்பதும் காரணமாகும்.

இந்திய பாட்டாளி வர்க்க இயக்கமும் குறிப்பாகத் தமிழ் பாட்டாளி வர்க்க இயக்கமும் ஜனநாயக சக்திகளும் இலங்கை மீதான இந்திய மேலாதிக்க திணிப்பை எதிர்த்த போராட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய பணி, ஜப்பானிய எதிர்ப்பு யுத்த காலத்தில் உலகப் பாட்டாளி வர்க்க இயக்கம் ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற்கு ஆதரவளித்ததைப் போல, நாமும் இந்தியப் படையின் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஈழ மக்களின் போரை ஆதரிக்க வேண்டும். நம்மைப் பொறுத்தவரையில் இந்திய-இலங்கை அரசுகள் ஒப்பந்தம் செய்துகொண்டு, இந்திய ஆக்கிரமிப்புப் படை இலங்கையில் தலையிட்டதும், அதை எதிர்த்து ஈழத்தமிழர்கள் நடத்திய போரை பின்வரும் முழக்கங்களை முன்வைத்து ஆதரித்தோம்.

தமிழ்த் தேசிய ஆவண

www.tamilarangam.net



"ராஜீவ்-ஜெயவர்த்தனே துரோக ஒப்பந்தம் ஒழிக!"
"மேலாதிக்க வெறி பேராசை பிடித்த ராஜீவ் அரசே!
இந்தியப் படைகளை இலங்கையிலிருந்து திரும்பப் பெறு!"
"ஆயுதம் ஏந்துவது ஈழமக்களின் அரசியல் உரிமை"
"ஈழத் தமிழர்களின் தேசிய இன விடுதலைப் போராட்டம் வெல்க!"

இலங்கை பிரேமதாசா அரசுடன் விடுதலைப்புலிகள் அமைப்பு போர் ஒய்வு ஒப்பந்தம் செய்துகொண்ட பிறகும்கூட புலிகள் இலங்கைப் பேரினவாத அரசிடம் பணிந்து போகவில்லை. இலங்கை பேரினவாத பிரேமதாஸா அரசு மீண்டும் ஒருமுறை ஈழத்தமிழ் மக்களின் மீது ஒரு பாசிச ஒடுக்குமுறை யுத்தத்தைத் தொடுத்ததின் விளைவாக ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டம் இப்போது ஒரு புதிய கட்டத்திற்குள் நுழைந்திருக்கிறது.

## இன்றைய உள்நாட்டு யுத்தமும் பாட்டாளி வர்க்க இயக்கமும்

பிரேமதாசா அரசு ஈழத் தமிழினத்தின் மீது மீண்டும் ஒரு தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தை தொடுத்திருக்கிறது. இந்த யுத்தத்தை ஏகாதிபத்திய வாதிகள் ஆதரிக்கின்றனர். இந்திய அரசு மறைமுகமாக ஆதரிக்கிறது.

இந்த யுத்தம் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் ஒரு யுத்தமாக இருக்கிறது.

அ) இன்றைய கட்டத்தில் இந்த யுத்தத்தின் நோக்கம் ஈழத் தமிழினம் அரசியல் சுதந்திரம் பெறும்பொருட்டு தனிநாடு அமைத்துக் கொள்வதாக இருக்கிறது.

இரு தேசிய இனங்கள் ஒரே அரசு அமைப்பிற்குள் வாழமுடியாது என்ற நிலைமையும் தனிநாடு அமைத்துக் கொள்வதற்கான காரணங்களும் இன்னும் நீடித்திருக்கிறது என்பதை அண்மைக்கால நிகழ்வுகளும்கூட எடுத்துக் காட்டுகிறது.

இலங்கையிலிருந்து ஈழத்தமிழினம் ஜனநாயக முறையில் பிரிந்து போவதற்கான வழிமுறையை (வாக்கெடுப்பை) இலங்கைப் பேரினவாத அரசு ஏற்கத்தயாராக இல்லை. அரசியல் வழியில் தீர்வு காணத் தயாராக இல்லை. அதற்கு மாறாக ஒரு உள்நாட்டு யுத்தத்தின் மூலமாக ஈழத் தமிழினத்தின் பிரிந்து போகும் உரிமையை மறுத்து, உரிமைக்கான இயக்கத்தை நசுக்க முயல்கிறது.

ஆகையால் ஈழத்தமிழினம் தனது பிரிந்து போகும் உரிமையை ஒரு உள்நாட்டு யுத்தத்தின் மூலமாக அடைவது தவிர்க்க முடியாததாகிறது.

எனவே சிங்களப் பேரினவாத பிரேமதாசா அரசை எதிர்த்து புலிகள் அமைப்பு போரிட்டாலும் மீண்டும் அது இந்திய அரசுடன் சமரசம் செய்துகொண்டு, அதைத் தலையிடக் கோருமா அல்லது பிரேமதாசா அரசுடன் சமரசம் செய்துகொண்டு ஈழத் தமிழகத்தின் ஆளும் வர்க்கமாக மாறிச் சீரழிந்து விடுமோ என்ற ஐயம் தோன்றுகிறது.



ஏனெனில் சமரசத்திற்கான சமூக வேர்கள் உள்ளன. இந்த வேர்கள் உள்ளவரை இப் பிரச்சினை எழவே செய்யும். எனவே இந்திய அரசு, இலங்கை அரசு, ஈழத்தமிழ் தேசிய இன விடுதலை இயக்கம் மற்றும் சர்வ தேசிய நிலைமை ஆகியவற்றை பரிசீலனை செய்வோமானால் இதை அறியலாம்.

இந்திய ஆளும் வர்க்கங்கள், அரசையும் பொறுத்தமட்டில் அவை 1983-லிருந்து 1987-ல் இந்தியப்படை இலங்கையில் தலையிட்ட காலம்வரை நடந்த தமிழீழ தேசிய இன விடுதலைப் போராட்டத்திலிருந்து தற்போது இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தை வேறுபடுத்திப் பார்க்கிறது. இலங்கை மீது தனது மேலாதிக்கத்தைத் திணிப்பதற்காக அப்போது அது கடைப்பிடித்த மூன்று உபாயங்களை கொண்ட (1. மாமூலான ராஜதந்திர முறைகள், 2. மறைமுகமாகத் தலையிடுதல் 3. இறுதியாக நேரடியாகத் தலையிடுதல்) கொள்கையை இப்போது நடைபெறும் உள்நாட்டு யுத்தகாலத்தில் அப்படியே கடைப்பிடிக்க முடியாது எனப் பார்க்கிறது.

முன்கூறப்பட்ட காலப்பகுதியில், இலங்கை அரசை எதிர்த்த தமிழீழத் தேசிய இன உரிமைப் போராட்டத்தில் சமரசப் போக்குடைய, பாராளுமன்றவாத டி.யூ.எல்.எப். முதல் எல்.டி.டி.இ. வரையிலான பல்வேறு வகைப்பட்ட அரசியல் சக்திகள் பங்குகொண்டன. ஆனால் இப்போது இலங்கை அரசை எதிர்த்து நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தை எல்,டி.டி.இ. (விடுதலைப்புலிகள் அமைப்பு) மட்டுமே தனியாக நடத்துகிறது. அன்று 1983-87 போராட்டத்தின் போது அதில் பங்குகொண்ட அரசியல் சக்திகள் மற்றும் குழுக்கள் அனைத்தும் தனிநாடு கோரிக்கையை உறுதியாக ஆதரித்தவை அல்ல. டி.யூ.எல்.எப் அமைப்பு 1983 ஜூன் கலவரத்திற்கு முன்பே தனிநாடு கோரிக்கையைக் கைவிட்டு விட்டது. எல்.டி.டி.இ. தவிர பிற போராளி அமைப்புகள் தனிநாடு கோரிக்கையை ஆதரிப்பதில் ஊசலாட்டம் அல்லது கைவிடும் நிலையில் இருந்தவைதான்.

ஆனால் இப்போது எல்.டி.டி.இ யுத்தம் நடத்துவதின் குறிக்கோள் தனிநாடு காண்பதுதான். ஆகையால் 1983-87-ஆம் ஆண்டுகளின் போராட்ட காலத்தில் அதில் பங்குகொண்ட சக்திகளை சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைக் கைவிடச்செய்து தமிழ் ஈழ மாநிலம் அமைப்பதுடன் திருப்தி கொண்டு இலங்கைமீது தன் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளச் செய்ததைப்போல், இப்போது யுத்தத்தை நடத்தும் எல்.டி.டிஇ-யை தற்போது ஏற்றுக்கொள்ள வைக்க முடியாது என இந்திய அரசு கருதுகிறது. ஆகையால் 1983-87 காலத்தில் தனது மேலாதிக்கத்தை நிறுவும் நோக்கத்திற்காக மறைமுகத் தலையீடு என்ற கருவியை பயன்படுத்தும் பொருட்டு தமிழ் ஈழப் போராளிகளுக்கு பயிற்சியளித்தல், ஆயுதங்களை வழங்குதல் மற்றும் தமிழகத்தை போராளிகள் தமது பின்புலமாக - தளமாகப் பயன்படுத்தல் என்ற கொள்கையை இப்போது நடைபெறும் யுத்தத்தின் இன்றைய கட்டத்தில் பயன்படுத்த முடியாது என இந்திய அரசு கருதுகிறது. எனவே எல்.டி.டி.இ,-யினர் தமிழகத்தை பின்புலமாக பயன்படுத்துவதற்கு அனுமதிக்கவில்லை.

இலங்கையில் நேரடித் தலையீட்டிற்கான - இராணுவத் தலையீட்டிற்கான வாய்ப்பு இப்போது குறைவாகவே இருப்பதாக இலங்கை அரசு கருதுகிறது. என்றாலும், இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இப்போது நடைபெறும் யுத்தம் ஒரு நீண்ட யுத்தமாகவே இருக்கும். இந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யுத்தத்தை ஒருவரையொருவர் தோற்கடிக்க முடியாமல் அது ஒரு நீண்ட காலத்திற்கு நடைபெறலாம். இதனால் இரண்டு விதமான நிலைமைகள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. 1) இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பினருமே ஒரு நீண்ட யுத்தத்தை நடத்துவதற்கான அன்னிய உதவியை - குறிப்பாக ராணுவ உதவியை நாடவேண்டிய நிலை தோன்றலாம். 2) இந்த ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தைக்கான ஒரு வாய்ப்பு தோன்றலாம்.

இவ்விரு வாய்ப்புகளைக் கருதியே இந்தியப் பிரதமர் வி.பி.சிங் "இந்திய-இலங்கை ஒப்பந்தம் இன்னும் அங்கே அமுலில் இருக்கிறது" என்று சொல்கிறார். "இலங்கையின் உள் விவகாரங்களில் மூன்றாம் நாடுகள் தலையிடுவதை இந்தியா அனுமதிக்காது" என்று இந்திய அயல் உறவுத்துறை அமைச்சர் குஜ்ரால் கூறுகிறார். இதிலிருந்து இந்திய அரசு நேரடித் தலையீட்டிற்கும், சமரசத்திற்கு புலிகளைத் தூண்டுவதற்குமான ஒரு வாய்ப்பிற்காக காத்துக் கொண்டிருக்கிறது என்பதைக் காணலாம். தனது பாகிஸ்தானுடனான யுத்தத்திற்கான வாய்ப்பு இன்னும் நீங்காத நிலைமையில் கடல்கடந்த நடவடிக்கையில் இந்தியப் படையை ஈடுபடுத்த முடியாது. ஆகையால் நேரடித் தலையீட்டிற்கும், சமரசத்திற்கான தூண்டுதலுக்கும் அது காத்துக் கொண்டிருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

அதே நேரத்தில், இந்திய அரசின் நேரடித் தலையீடும், சமரசத்திற்கான தூண்டுதலும் ஆகிய இரண்டுமே இலங்கைமீது அதன் மேலாதிக்கத்தை திணிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதால், அவற்றை தோற்கடிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கின்றன. ஏனெனில், விடுதலைப் புலிகளை நசுக்குவதற்கான இலங்கை அரசின் அழைப்பின் காரணமாக தலையிடுவதாக இருந்தாலும் சரி, அல்லது விடுதலைப்புலிகளுடன் சமரசம் செய்துகொண்டு 'தமிழரின் நலன் காப்பது' என்ற பெயரில் தலையிடுவதாக இருந்தாலும் சரி, அல்லது இலங்கை அரசின் அழைப்பை ஏற்று வேறு ஒரு நாடு தலையிடுவதை எதிர்த்து இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைக் காட்டி இந்திய அரசு தலையிடுவதாக இருந்தாலும் சரி, இவற்றில் எவ்வகையான தலையீடானாலும், அது தோற்கடிக்கப்படும் என்பது நிச்சயம். காரணம் இத்தலையீட்டினால் ஏற்படும் இந்திய மேலாதிக்கத்தை இலங்கைவாழ் மக்கள் அனுமதிக்கப் போவதில்லை. 1987-ல் இலங்கையின் இந்தியத் தலையீடும், இன்னும் பலவும் இத்தகைய தலையீடுகள் வெற்றிபெறாது என்பதற்கு சான்றுகளாக உள்ளன.

இலங்கை அரசை எடுத்துக் கொள்வோம். அதுவும் விடுதலைப் புலிகளைச் சமரசத்துக்குத் தூண்டுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. நீண்ட யுத்தத்தின்போது, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விடுதலைப் புலிகளுக்கு சேதத்தை ஏற்படுத்திய நிலைமையில் இலங்கை அரசு விடுதலைப் புலிகளை சமரசம் செய்து கொள்ளும்படி தூண்டலாம். விடுதலைப் புலிகளின் செயல்களால் உருவாகும் அந்நியத் தலையீட்டிற்கான வாய்ப்புகளைத் தவிர்ப்பதற்காகவும், இலங்கை அரசு புலிகளை சமரசம் செய்துகொள்ளுமாறு தூண்டலாம். இத்தகைய சமரசம்கூட தோற்கடிக்கப் படக்கூடியதே. ஏனெனில் சிங்களப் பேரினவாத பாசிச ஒடுக்குமுறைக் கொள்கை பொருளியல், ஆன்மீக அம்சங்களைக் கொண்டது. பொருளியல் ரீதியில் அது ஈழத் தமிழ்நாட்டு மக்களின் பொருளாதார வாழ்விற்கு சுதந்திரத்திற்குத் தடையாக விளங்குகிறது. ஆன்மீக ரீதியில் அது ஈழத் தமிழரின்தேசிய உணர்வை



அழிக்க முயல்கிறது. இருப்பினும் சிலர் சமரசத்தை வரவேற்கலாம். ஆயினும் சம்பவங்களின் பொதுவான போக்கு பணிந்துபோவதை அனுமதிக்காது. சிங்களப் பேரினவாத பாசிச அடக்குமுறைகளின் தனித் தன்மையான குணாம்சங்கள் இந்த அம்சத்தை முடிவுசெய்து விட்டது.

இந்திய, இலங்கை நிலைமைகளைத் தொடுத்துப் பார்ப்போமேயானால் சமரசத்திற்கான தூண்டுதல்கள் இருக்கின்றன. அவை தோற்கடிக்கப் படக்கூடியதே. எனினும் இதைத் தீர்மானிப்பது ஈழத் தமிழ் தேசிய இனத்தில் நிலவும் நிலைமைகளே ஆகும். ஆகையால் ஈழத் தமிழ் தேசிய இனத்தின் நிலைமையை எடுத்துக் கொள்வோம்.

ஈழத் தமிழினம் தேசிய இன விடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்பதிலுள்ள பிரச்சினை, விடுதலைப்புலிகள் அமைப்பு மட்டுமே யுத்தத்தை தனியாக நடத்துகிறது. இதுவே அதன் பலமும், பலவீனமும் ஆகும். இந்திய மேலாதிக்கத்திற்கு - இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு சேவைசெய்த அமைப்புகள் ஈ.பி.ஆர்.எல்.எப்-ஐப் பொறுத்தவரையில்; இப்போது நடக்கும் யுத்தத்தை விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான தனிப்பட்ட யுத்தமாக பார்க்கிறது. தனது அமைப்பு இந்த யுத்தத்தில் நடுநிலை வகிப்பதாக கூறுகிறது.

விடுதலைப்புலிகள் அமைப்பு இன்றைய யுத்தத்தில் தனித்துநின்று போரிடுவதற்கு இது ஒரு காரணமாகும். பிற அமைப்புகள் மக்களிடமிருந்து தனிமைப்பட்டு சிதறுண்டு போய்விட்டன. இதன் காரணமாக விடுதலைப் புலிகள் தனித்துநின்று போரிடுவதற்கு மற்றொரு காரணம் அவ்வமைப்பின் ஜனநாயக அமைப்பு மற்றும் எதேச்சதிகாரப் போக்கும், அதன் ஒரு படையின் ஆட்சி அல்லது அனைத்து அதிகாரத்தையும் தனது ஏகபோகமாக்கிக் கொள்வது என்ற பாசிசக் கொள்கையும் ஆகும்.

இதன் விளைவாகவே இன்றைய விடுதலைப்போரில் பங்காற்ற வேண்டிய பிற புரட்சிகர சக்திகளும், ஜனநாயகவாதிகளும் இதில் பங்குகொள்ள முடியாமல் தடுக்கப் பட்டுள்ளனர். பரந்துபட்ட மக்களும்கூட ஜனநாயக மறுப்பின் காரணமாக (அமைப்பு ரீதியாக திரண்டு தங்களின் விடுதலைக்காக போராடமுடியாமல்) அமைப்பு ரீதியாக திரட்டப்பட்டு, அவ்வமைப்புகளின் பலத்தை சார்ந்து போரிடுவதற்கு வாய்ப்பு மறுக்கப்படுவதால் தங்களின் விடுதலைக்காக போரிடமுடியாமல் வெறும் பார்வையாளர் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். எந்தவொரு தேசிய விடுதலை யுத்தமும் ஒரு மக்கள் யுத்தமாகும். எனவே இக் கொள்கை ஈழத் தமிழினம் தேசிய விடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்பதற்கு பாதகமான ஒன்றாகவும், சமரசத்திற்குப் பணிந்து போவதற்கு வாய்ப்பை உருவாக்கும் ஒன்றாகவும் இருக்கிறது.

இதைப்போலவே இலங்கை அரசின் பாசிச ஒடுக்குமுறையால் அவதியுறும் மலைவாழ் மக்களையும் (மலையகத் தமிழர்கள்), சிங்கள தேசிய இனத்தின் உழைக்கும் மக்களையும் அவ்வரசை எதிர்த்த போராட்டத்தில்ஒன்று திரட்டுவதற்கும் அக்கறையற்று இருப்பதற்கு காரணமாக உள்ள குறும் (குறுகிய) தேசியவாதக் கண்ணோட்டமும் அனைத்து ஜனநாயகச் சக்திகளையும் விடுதலைப் போருக்கு ஆதரவாக திரட்டுவதற்கு தடையாக இருப்பதுடன், அவர்களை எதிரி தன் பின்னால் திரட்டிக் கொள்வதற்கான வாய்ப்பை அளிக்கின்றது. ஆகையால் குறும் தேசியவாதமும் தேசிய விடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்பதற்கு தடையாகவும், எதிரியுடன் சமரசம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்துகொண்டு பணிந்து போவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது.

விடுதலைப்புலிகள் அமைப்பு கடைப்பிடிக்கும் அயலுறவுக் கொள்கை, குறிப்பாக ஈழத் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொள்ளாமல், ஏதாவது ஒரு வழியில் உதவியைப் பெறுதல் அல்லது இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் இடையில் உள்ள முரண்பாட்டை எப்படியாவது பயன்படுத்திக் கொள்வது சாத்தியம் என்ற கொள்கையின் அடிப்படையில் அகில இந்திய, தமிழ் மாநில அரசாங்கங்களுடனும் அரசியல் கட்சிகளுடனும் விடுதலைப்புலிகள் அமைப்பு உறவு கொள்ளும் கொள்கையும் ஈழத்தமிழினம் விடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்பதற்கு தடையாகவும், எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு பணிந்து போவதற்கான வாய்ப்பை உருவாக்குகிறது.

விடுதலைப்புலிகள் அமைப்பு நீண்டகால யுத்தத்தை கடைப்பிடிப்பது போற்றத்தகுந்ததே என்றாலும், தேசிய விடுதலைக்கான நீண்ட யுத்தம் ஒரு புரட்சிகர யுத்தம் என்ற முறையில் அதற்கு "ஒரு மார்க்சிய அரசியல் மார்க்கத்தோடு சரியான ஒரு மார்க்சிய இராணுவம் தேவை" என உலகம் கண்டுள்ள புரட்சிகர யுத்தங்களின் படிப்பினையை அவ்வமைப்பு இன்றுவரை பார்க்கத் தவறுகிறது. ஆகவேதான் அவ்வமைப்பு கடைப்பிடிக்கும் நீண்டகால யுத்தமுறைக்கு முரண்பட்டதாக அது கடைப்பிடிக்கும் அரசியல் மார்க்கம் இருக்கிறது.

எனவே, ஈழத்தமிழ் தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்க இயக்கத்தினரும் ஜனநாயக சக்திகளும் பிரேமதாசா அரசின் பாசிச இன ஒடுக்குமுறையை எதிர்த்து இந்நீதியான போரில் ஊக்கமாகப் பங்கு கொள்வதுடன் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவளிப்பது அவர்கள் கடமையாகும். அதே நேரத்தில், சமரசப் போக்குகளைத் தோற்கடிப்பதற்காகவும், ஈழத் தேசிய இனத்தின் அரசியல் முன்னேற்றத்திற்காகவும், புலிகள் அமைப்பின் ஜனநாயக மறுப்பு மற்றும் எதேச்சதிகாரப் போக்குகளை எதிர்த்தல், மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகப் பாடுபடுதல், தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவோர் அனைவருக்கும் ஆயுதம் ஏந்தும் உரிமை இருக்கவேண்டும், மக்கள் கமிட்டிகளுக்கு அதிகாரம் என்ற கோட்பாட்டிற்கு ஆதரவு திரட்டுதல், இலங்கை அரசின் பாசிச அடக்குமுறையால் அவதியுறும் மலையகத் தமிழர்கள், சிங்களத் தேசிய இனத்தைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் ஆகியோரின் அவ்வரசை எதிர்த்த போராட்டத்தையும் ஈழத் தமிழினத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் ஒன்றிணைத்தல்.

ஈழத் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டச் சக்திகளுக்கு இடையிலுள்ள உறவு அவை ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்று அமைத்துக் கொள்ளவேண்டும் என்ற கொள்கைக்காகப் போராடுதல். இக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகப் பாடுபடுவது அவர்களின் கடமையாக இருக்கிறது. ஒரு குறிப்பாக திட்டத்தை முன்வைத்து விடுதலைப் புலிகள் அமைப்புடன் ஒரு ஐக்கிய முன்னணியை நிறுவுவதற்கான போராட்டத்தை நடத்தவேண்டியது இன்றைய கட்டத்தில் அனைத்து புரட்சியாளர்களினதும், ஜனநாயகவாதிகளினதும் கடமையாக உள்ளது. விடுதலைப் புலிகளின் அமைப்பு உள்நாட்டு யுத்தத்தில் ஊன்றி நிற்கும் வரை "பிரேமதாசா அரசு



தொடுத்துள்ள தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்த ஈழத் தமிழினத்தின் விடுதலை யுத்தத்தை ஆதரிப்போம். தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலி அமைப்புடன் ஒன்றுபடுவோம். ஜனநாயகத்திற்காக அதனுடன் போராடுவோம்!" என்பதே அனைத்து ஈழத் தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டச் சக்திகளின் முழக்கமாக அமைய வேண்டும்.

## இன்றைய யுத்தத்தில் நாம் செய்யவேண்டியது என்ன?

இலங்கை அரசு ஈழத் தமிழினத்தின் மீது மீண்டும் ஒருமுறை ஒரு தேசிய இன ஒடுக்குமுறையைத் தொடுத்திருக்கிறது. விடுதலைப் புலிகள் ஒரு தற்காப்பு யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஈழத் தமிழினம் இலங்கை அரசிலிருந்தும் ஒடுக்கும் சிங்களத் தேசிய இனத்தினிடமிருந்தும் பிரிந்து போகும் ஜனநாயக உரிமையை இலங்கை அரசு மறுக்கிறது. அதை ஜனநாயக முறையில் தீர்க்காமல் யுத்தத்தின் மூலம் நசுக்குவதின் மூலம் தீர்வுகாண முயல்கிறது. அரசியல் ரீதியில் தீர்வு காண மறுத்து இராணுவ முறையில் தீர்வு காண விரும்புகிறது.

எனவே ஈழத்தமிழ் தேசிய இனம் தவிர்க்க முடியாமலே தன்னுடைய ஜனநாயக உரிமையை அடைவதற்கு இராணுவ முறையை மேற்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப் படுகிறது. ஆகையால் ஈழத்தமிழரின் தற்காப்பு யுத்தம் ஜனநாயக ரீதியான ஒரு நீதி யுத்தமாகும். இத் தேசியஇன விடுதலை யுத்தம் உலக மக்கள் அனைவராலும் ஆதரிக்கத தகுந்த ஒரு யுத்தமாகும். இந்திய மக்கள் அனைவரும் ஆதரிக்கவேண்டிய யுத்தமாகும். இந்த விடுதலைப் போரை பாட்டாளி வர்க்க இயக்கமாகிய நாமும் ஆதரிக்கின்றோம்.

ஆனால் இந்திய அரசு நடுநிலை வகிப்பதுபோல் பாசாங்கு செய்கிறது. அதே நேரத்தில், இலங்கை அரசுக்கு உதவத் தயார் எனவும் வி.பி.சிங் கூறியிருக்கிறார்.

தமிழக முதல்வர் கருணாநிதியோ தனது உண்மை சொரூபத்தை மூடி மறைப்பதற்காக ஈழத் தமிழருக்கு ஆதரவாக 'பந்த்' நடத்துகிறார். ஆனால் மத்திய அரசு, மாநில அரசு இரண்டும் சேர்ந்து கொண்டு தமிழகத்தில் ஈழத் தமிழ் விடுதலைப் போரில் ஈடுபடுவோரை நடமாடக்கூட அனுமதிப்பதில்லை.

இந்திய அரசும் ஆளும் வர்க்கங்களும் அரசியல் கட்சிகளும் திருத்தல்வாதக் கட்சிகளும், தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய அனைத்தும் தற்போது நடைபெறும் யுத்தம் ஈழத் தமிழினத்தின் மீது சிங்களப் பேரினவாத இலங்கை அரசு தொடுத்திருக்கின்ற ஒரு பாசிச இன ஒடுக்குமுறை யுத்தம் என்பதை மூடிமறைத்துவிட்டு, இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் யுத்தமாக மட்டுமே சித்தரித்துக் காட்டுகின்றன. சிவிலியன்கள் - சாமானியர்கள் கொலை செய்யப்படக்கூடாது என்ற குரல் எழுப்பி, விடுதலைப்புலி அமைப்பினர் கொல்லப்படுவதை நியாயப் படுத்துகின்றன. விடுதலைப்புலி அமைப்பினர், இலங்கைமீது இந்திய மேலாதிக்கத்தையும் இந்திய ஆக்கிரமிப்புப் படையையும் எதிர்த்துப் போராடி, இந்தியப் படையை வெளியேறிடச் செய்ததற்காக, இக் கட்சிகள் இப்போது பழிவாங்க முயல்கின்றனர். மீண்டும் ஒருமுறை தலையிடுவதற்காக இந்திய அரசு வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்தப் போரில் ஈழத்தமிழ் தேசிய இனம் வெற்றிபெற்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டால், அதனால் இந்தியாவிலுள்ள ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் வீறு கொண்டெழுந்து போராட்டப் பாதையில் இறங்கிவிடுமோ, ஏற்கனவே தனிநாடு கோரி போராடும் காஷ்மீர் மக்கள் இறுதிவரை போராடுவோம் என்று உறுதி கொள்வார்களோ என அஞ்சி இந்திய அரசு ஈழத்தமிழரின் தனி நாட்டிற்கான போராட்டத்தை ஒடுக்குவதற்காக இலங்கை அரசுக்கு ஆதரவளிக்கிறது.

தமிழின ஆளும் வர்க்கங்களின் நலன்களை பிரதிநிதித்துவப் படுத்தும் கருணாநிதி, தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமையை, சுயநிர்ணய உரிமையை கைகழுவி விட்டு "மாநிலங்களுக்கு அதிகாரம்" என்ற முழக்கத்துடன் திருப்தி கொண்டுவிட்ட கருணாநிதி இந்திய அரசின் இலங்கைக் கொள்கைக்கு துணைபோவது இயல்பானதே.

எனவே மத்திய-மாநில அரசுகளின் சதிச் செயல்களை முறியடித்து ஈழத்தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போரினை வெற்றி பெறச் செய்யும் பொருட்டு;

* இந்திய அரசே!
  இலங்கை அரசுடனான அனைத்து உறவுகளையும் துண்டித்துக் கொள்!
  ஈழத்தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!

* தமிழக மக்களே!
  ஈழத்தமிழரின் விடுதலைப் போருக்கு அனைத்து உதவிகளையும் செய்வோம்!
  தமிழகத்தை ஈழத் தமிழின விடுதலைப் போருக்கு பின்புலமாக்குவோம்!

ஆகிய முழக்கங்களின் அடிப்படையில் அணிதிரள வேண்டுமாறு அறைகூவி அழைக்கிறோம்.

படியுங்கள்!
பரப்புங்கள்!

சமரன்

மாக்ஸிய-லெனினிய தத்துவ
அரசியல் ஏடு

இல. கோவிந்தசாமி
52/4 A, மேட்டுத் தெரு
சாத்துமா நகர்
திருவொற்றியூர்
சென்னை - 600019

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்